அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.27/94(1)

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1994,யூலை மாதம் 25ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட தொழில்நுட்ப
சேவையை மீளமைத்தல்.

1994.07.25ஆந் திகதியிட்ட 27/94ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக.

01. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 04.01 பிரிவுக்குப் பதிலாக கீழ்வரும் பந்தியைச் சேர்க்க.

04.01 புதிய சம்பளங்களுக்கு இப்போதுள்ள சம்பளங்களை மாற்றியமைத்தல் படிமுறை அடிப்படையில் அமைதல் வேண்டும்.

04.01.01 சம்பள ஏற்றத் திகதிகளில் மாற்றம் எதுவும் இருக்க மாட்டாது.

04.01.02 1994.06.30 அன்று அல்லது அதற்கு முன்பு உழைக்கப்பட்ட சம்பள ஏற்றங்கள் புதிய சம்பளங்களுக்கு மாற்றப்படுவதற்கு முன்னதாக இப்போதைய சம்பள அளவுத் திட்டங்களை அடியொற்றி வழங்க வேண்டும்.

04.01.03 1994.07.01 அன்று அல்லதுஅதற்குப் பின்பு சம்பள ஏற்றங்களை உழைப்போருக்கு புதிய சம்பள அளவுத் திட்டங்களின்படி சம்பளவேற்றத்தின் முழுப் பெறுமதிக்கு வழங்க வேண்டும்.

02. எழுதுவினைஞர் சேவையிலும் மற்றும் சமாந்தர சேவைகளிலும் உள்ள உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க நிருவாக அமைச்சின் 12.03.92 ஆந் திகதியிடப்பட்ட 15/92 ஆம் இலக்க சுற்றறிக்கையில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சலுகைகள், நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட சேவையில் 11'அ' பிரிவில் (11'ஏ')உச்சப்படியில் தேங்கியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும்.

03. நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட சேவைகள் உள்ள கூட்டுத்தாபனங்களிலும், சபைகளிலும் இச்சுற்றறிக்கையின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சுக்கள்,திணைக்களத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒப்பம்: வை.பி.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.